


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2024) தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, பெரியார் திடலில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மய்யத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2024) தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

### முத்தமிழறிஞர் கலைஞரால் குமரியில் நிறுவப்பட்ட வள்ளுவர் சிலையின் வெள்ளி விழா!

# பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 10 அரசு விரைவு பேருந்துகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 25 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உலக அளவில் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா கொண்டாட்டத்தை பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் 10 விரைவு பேருந்துகளின் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2024) சென்னை, அண்ணா சாலை பல்லவன் இல்ல மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட, உலக அளவில் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா கொண்டாட்டத்தை பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் 10 விரைவு பேருந்துகளின் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்பது புகழ்மொழி. திருவள்ளுவர் அவர்கள் இரண்டு வரிகளில், சாதாரண ஏழை எளிய மக்கள் தொடங்கி, பேரரசர்களும் பின்பற்ற வேண்டிய, உலக மக்கள் அனைவருக்குமான வாழ்வின் அறவழி முறைகளையும், கடைப்பிடிக்க வேண் டிய நெறிமுறைகளையும் அறம், பொருள், இன்பம் என வகைப்படுத்தி 1,330 திருக்குறள்களை 2,000 ஆண்டுகளுக்கு முன்பே இயற்றி உலக மக்களுக்கு, தமிழ்நாட்டின் வழிகாட்டுதலையும், சிறப்புகளை எடுத்து இயம்பினார்.

**வள்ளுவரின் புகழை பறைசாற்றிய கலைஞர்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகில் உள்ள மிக முக்கியமான அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பள்ளிகள் முதல் உலகிற் சிறந்த பல்கலைக் கழகங்கள் வரை பயன்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

வள்ளுவரின் புகழை உலகமெங்கும் கொண்டு செல்ல முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் அமைத்த வள்ளுவர் கோட்டத்தோடு நில்லாமல், கடல் அலைகள் தாலாட்டும் குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவருக்கு 133 அடியில் வானுயர சிலை அமைக்க முடிவு செய்தார்.

குமரியில் சிலை அமைக்க 1975 ஆம் ஆண்டே திட்டமிட்டாலும், அவரது கனவு நினைவாக பல ஆண்டுகள் காலம் ஆனது. 133 அதிகாரங்களை குறிக்கின்ற வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 133 அடியில் சிலையை உருவாக்குகின்ற பொறுப்பை 1996 ஆம் ஆண்டில் சிற்பி கணபதி ஸ்தபதியார் அவர்களிடம் ஒப்படைத்தார்.

செவ்வனே முடிவுற்ற திருவள்ளுவர் சிலையை 2000ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் தொடங்கும் மணித்துளியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முக்கிய தலைவர்கள், தமிழறிஞர்கள் முன்னிலையில் மிகப் பெரிய விழா எடுத்து திறந்து வைத்து, உலக வரலாற்றின் முக்கிய மணித்துளியில் நடைபெற்ற ஒரே நிகழ்வாக இடம் பெறச் செய்தார்.

சிலை வடிவமைக்கின்ற பணி நடைபெறும்போதே “சிலை நிற்குமோ நிற்காதோ” என்று சந்தேகமாக கேட்டவருக்கெல்லாம், பதில் அளிக்கும் வகையில் உலகையே உலுக்கிய ஆழிப்பேரலையை கட்டித் தழுவி, எந்தவித பாதிப்பும் இல்லாமல், கம்பீரமாக நிமிர்ந்து நின்று உலக தெலைக்காட்சிகளில் மீண்டும், மீண்டும் ஒளிபரப்பாகி அய்யன் திருவள்ளுவர் சிலை முத்தமிழறிஞருக்கு உலக அளவில் புகழ் சேர்த்தது.

சிலை திறந்ததில் இருந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் இருந்து பலகோடி சுற்றுலா பயணிகளும் வருகைதந்து அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, உலக சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்த அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா காண்பதையொட்டி, வருகின்ற டிசம்பர் 31ஆம் தேதி மற்றும் ஜனவரி 1ஆம் தேதி இரண்டு நாட்களும் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்திருக்கிறது.

இந்த வெள்ளிவிழாவை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டிகள். கல்லூரி மாணவர்களிடையே சோஷியல் மீடியாவில் ஷார்ட்ஸ் - ரீல்ஸ் ஏ.ஐ மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் வாயிலாக திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டிருக்கின்ற இடங்கள் வரைபடத்தில் குறிக்கப்பட்டு எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட உள்ளன. அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச் சிலை அருகே சீரொளிக் காட்சி (3D Laser) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவில் கருத்தரங்கம் - பேச்சரங்கம்!**

வெளிநாட்டில் இருக்கின்ற தமிழ் இணைய கழக மையங்கள், தமிழ்ச் சங்கங்கள், பிற மாநிலங்களில் இருக்கும் தமிழ்ச் சங்கங்கள்,

புது டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் யூடியூப் மூலம் ஒளிபரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 25 முதல் 30 வரை மாவட்ட அளவில் திருக்குறள் தொடர்பான கருத்தரங்கம், பேச்சரங்கம் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படவும் உள்ளது.

**38 மாவட்டங்களிலும் விழிப்புணர்வு!**

அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்வுகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் 10 விரைவு பேருந்துகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த 10 பேருந்துகளும் தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்கள் மற்றும் பெங்களூர் மாநகரத்திற்குச் செல்லும் வழித்தட பேருந்துகளாக தேர்வு செய்யப்பட்டு அய்யன் திருவள்ளுவரின் உருவப்படங்கள் மற்றும் புகழினை தாங்கி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளன.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2024) சென்னை, அண்ணா சாலை பல்லவன் இல்ல மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா கொண்டாட்டத்தையொட்டி, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக விரைவு பேருந்துகளின் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் நகர கழக அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணியாகச் சென்று அவரின் சிலைக்கு வனத்துறை அமைச்சர் முனைவர் பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ , மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கோ.பாஸ்கரன், அப்துல் சலாம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, பொதுக்குழு உறுப்பினர் பஞ்சநாதன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### அரசியல் காழ்ப்புணர்ச்சியால்

# மனசாட்சியை மறந்து பேசும் பா.ம.க.!

## அமைச்சர் எ.வ.வேலு குற்றச்சாட்டு!

*சேலம், டிச. 25 -*

எதிர்க்கட்சியாக இருப்பதால், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மனசாட்சியை மறந்து பா.ம.க.வினர் பேசுகின்றனர் என பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு குற்றம் சாட்டினார்.



சேலம், சூரமங்கலம் உழவர் சந்தை தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் உழவர் சந்தையில் விவசாயிகள், பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தனர்

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் கூறியதாவது: விவசாயிகளின் நலன்கருதி கடந்த 1999ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் முதன்முதலாக 100 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டன. விவசாயிகள், இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக லாபம் ஈட்ட வேண்டும் என்பதற்காக இந்த உழவர் சந்தைகள் தமிழகத்தில் தொடங்கப்பட்டன.

சூரமங்கலம் உழவர் சந்தையில் 170 முதல் 200 கடைகள் உள்ளன. இங்கு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்கள் தங்கள் விற்பனையைத் தொடர்ந்து செய்து வருகி றார்கள். இந்த உழவர் சந்தைகளுக்கு பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து செல்கின்றனர். குறிப்பாக, உழவர் சந்தைகளை மேம்படுத்த ரூ.27.50 கோடி ஒதுக்கீடு செய்து, புனரமைக்கப்பட்டு வருகிறது.

**விவசாயிகளின் நலன் காக்கும் அரசு!**

நடப்பு நிதியாண்டில் தமிழகத்தில் வேளாண்மை துறைக்காக ரூ.38,904 கோடி நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அதேபோல, விவசாயத்துக்கென தனி நிதிநிலை அறிக்கையை கொண்டு வந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். திமுக அரசு, விவசாயிகளின் நலன்காக்கும் அரசாக உள்ளது.

ஆனால் எதிர்க்கட்சியாக இருக்கி றோம் என்பதற்காக பா.ம.க. மனசாட்சியை மறந்து பேசுகிறது. வேளாண்மைக்கு தனியாக நிதி ஒதுக்கப்படுகிறது. அதற்கான செலவு செய்யப்படுகிறது. ஆனால், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மனசாட்சியை மறந்து பேசுகின்றனர். மனசாட்சியோடு இருப்பவர்கள் இவ்வாறு பேச மாட்டார்கள்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறினார்.



திருச்சியில் தந்தை பெரியாரின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தி.மு.க. கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் ஏராளமான தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் முத்துச்செல்வம், விஜயா ஜெயராஜ், கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, தொ.மு.ச. மாநில செயலாளர் குணசேகர், குடமுருட்டி சேகர், லால்குடி நகர செயலாளர் துரை, கதிர்வேல் மோகன்தாஸ் இளங்கோ நாகராஜ் ராம்குமார் கனகராஜ் கலைச்செல்வி, பீ.ஆர்.பாலசுப்பிரமணியன், ராமதாஸ், புஷ்பராஜ், பந்தல் ராமு, கருணாமூர்த்தி தஸ்தா, சர்ச்சில், மாணிக்கம், மதனா கருமண்டபம் சுரேஷ் பரமசிவம், கருத்து கதிரேசன் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.